# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்-100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

*************

முறையீட்டு மனு எண்: 081/2017/பேரு

ஆணை எண்: 150/2017

நாள்: 14/06/2017

பா. செந்தில் குமார்,
2வது வார்டு முன்னாள் கவுன்சிலர்
காட்டுப்பாளையம்
மொடக்குறிச்சி, 638 104
ஈரோடு மாவட்டம். — முறையீட்டு மனுதாரர்

எஸ்.தேவா
செயல் அலுவலர் (ஓய்வு)
பேரூராட்சிகளின் உதவி இயக்குனர்
ஈரோடு — எதிர் மனுதாரர்

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சியின் முன்னாள் 2வது வார்டு கவுன்சிலர் திரு பா. செந்தில் குமார் என்பவரது 11.01.2017 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டுள்ளது. மேற்படி முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் ஏற்கனவே தன்னால் கொடுக்கப்பட்ட புகார் மனுவின் மீது விசாரணை செய்யப்பட்டு இறுதியாணை எண் 07/2016 நாள் 15.04.2016 ல் இம்முறை மன்றம் வெளியிட்டது என்றும் அவ்வாணையின்படி பேரூராட்சிகளின் இயக்குனர், சென்னை மற்றும் ஈரோடு பேரூராட்சிகள் உதவி இயக்குனர் மேற்படி மொடக்குறிச்சி பேரூராட்சியின் செயல் அலுவலர் செலுத்தவேண்டியதாக குறிப்பிட்டுள்ள தொகைக்கு வசூல் நடவடிக்கையோ சொத்துக்களை முடக்குவதற்கான நடவடிக்கையோ எடுக்கவில்லை என்றும் இது குறித்து உரிய ஆணை வழங்கிடவும் கேட்டுள்ளார்.

மேற்படி புகார் மனு ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த திரு எஸ்.தேவா என்பவர் மீதும், அரசு பணியமைப்பைச் சேர்ந்த பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் மீதும் குற்றச்சாட்டுகள் சுமத்தி மனுதாரரால் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது. இப்புகார் சம்பந்தமாக மனுதாரர் விளக்கமளிக்க இம்முறைமன்ற நடுவண் அறிவிப்பாணை ந.க.எண். 081/TPT/2017 நாள் 01.02.2017 வாயிலாக இம்முறைமன்ற நடுவண் அலுவலகத்தில் 22.03.2017 அன்று ஆஜராகிட அறிவுறுத்தப்பட்டது. மனுதாரர் மேற்படி விசாரணைக்கு ஆஜராகததால் மனு தள்ளுபடி செய்திடலாம் என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவத்தால் மேற்படி மனுதாரரின் மனுவினை முடித்து வைத்து தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 14-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்
திரு. பா. செந்தில்குமார்,
2வது வார்டு உறுப்பினர் (முன்னாள்)
காட்டுப்பாளையம்
மொடக்குறிச்சி – 638104